## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2012/2013 (மார்ச்/ஏப்ரல் 2015)

# OCC 4101 விழுமிய கல்வியும் ஆளுமை விருத்தியும்
# Values Education & Personality Development

நேரம் : 03 மணித்தியாலங்கள்

11 MAY 2015

நீர் விரும்பிய நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

01.(அ) ஆளுமை விருத்தியில் விழுமியக்கல்வி எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றதென்பதை விழுமிய இயல்புகளின் அடிப்படையில் விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) இன்றைய நிலையில் விழுமியங்கள் அழிவடைந்துகொண்டு செல்வதற்கான காரணிகளைத் தடுக்க உமது ஆலோசனைகளை முன்வைத்து விளக்குக.

(10 புள்ளிகள்)

02.(அ) ஆசிரியர் கல்வியில் விழுமியத்தினை திசைகோட்படுத்துவதன் முக்கியத்துவத்தினை விளக்கி இன்றைய நிலையில் ஆசிரியர்கள் விழுமியத்தை வளர்ப்பதில் அக்கறை உள்ளவர்களாக இருக்கின்றனரா என்பதை விமர்சிக்க.

(13 புள்ளிகள்)

(ஆ) திருக்குறளில் காணப்படும் காமத்துப்பால் குடும்ப வாழ்க்கை தொடர்பான விழுமியத்தினைப்பற்றி தெளிவுபடுத்துகின்றது. ஆனால் அவை அனைத்தும் இன்றைய நிலைக்கு சாத்தியமானவையா என்பதனை ஆராய்க.

(12 புள்ளிகள்)

03.(அ) தனிமனிதனில் விழுமியக்கல்வியை விருத்திசெய்வதில் இரு சமூக நிறுவனங்களின் பங்களிப்பினை ஆராய்க.

(15 புள்ளிகள்)

(ஆ) மதங்கள் குறிப்பிடும் ஒழுக்கக் கருத்துக்களை நடைமுறைப் படுத்துவதில் மதநிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்களை இன்றைய நிலைப்பாட்டோடு தொடர்புபடுத்தி ஆராய்க.

(10 புள்ளிகள்)

04.(அ) பாடசாலைகளில் மாணவர்களின் ஒழுக்கக் கல்வியை மேம்படுத்தக் கையாளப்படும் உத்திகளை ஆதாரத்துடன் விளக்கி அவை பாடசாலைக்குப் பாடசாலை வேறுபடுகின்றனவா என்பதை விமர்சிக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) குடும்பங்களில் பிள்ளைகளின் நடத்தைசார் விழுமியங்களை சுமூகமாகக்கொண்டு நடத்துவதில் பெற்றோரின் பங்களிப்பினை விளக்குக.

(10 புள்ளிகள்)

05. பின்வருவனவற்றை சுருக்கமாக விளக்குக.

(அ) முழுநலம் தொடர்பான கருத்து.

(ஆ)மாணவர்களின் விழுமியத்தினைப் பாதிப்பதில் சகபாடிகளின் செல்வாக்கு.

(இ) தைத்திரிய உபநிடதம் கூறும் பன்னிரு இரத்தினங்கள்

(ஈ) விவேகானந்தரின் பிரதான விழுமியக்கருத்துக்கள்

(உ) தகவல் தொடர்பாடல் சாதனங்கள்மூலம் விழுமியத்தை மேம்படுத்தும் வழிமுறைகள்

(5x5=25 புள்ளிகள்)

06.(அ) இஸ்லாமிய, பௌத்த மதங்கள் கூறுகின்ற சமூகவாழ்விற்கான வழிகாட்டல்கள் இன்றைய நவீன கலாசாரத்திற்கு ஏற்புடையதாக அமைகின்றனவா என ஆராய்க.

(15 புள்ளிகள்)

(ஆ) இந்து, கிறிஸ்தவ மதங்களுக்கிடையிலான வேறுபட்ட ஒழுக்க விழுமிய கருத்துக்களை ஆதாரம்காட்டி அவற்றினை சீராக்குவதற்கு நீர் முன்வைக்கும் சில ஆலோசனைகளை எடுத்துரைக்குக.

(10 புள்ளிகள்)

*****